**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 313/2021 |
| Name | : Shanmugavelusamy |
| P.W. | : 3 |
| Father Name | : Muthusamy |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.12.2024

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது நரசிங்காபுரத்தில் வசித்து வருகிறேன். சொந்த தொழில் செய்து வருகிறேன். 14.04.2021 ம் தேதி மாலை சுமார் 06.00 மணி அளவில் நானும், சகாதேவன் என்பவரும் இருசக்கர வாகனத்தில் கருப்புச்சாமி புதுருக்கு சொந்த வேலையாக ரோட்டில் சென்று கொண்டிருந்த போது நரசிங்காபுரம் ஊர் கடைசியில் பாறைக்குழி உள்ளது. அந்த இடத்தில் TN 39 F 1616 என்ற எண் கொண்ட லாரியில் மருத்துவ கழிவுகளை கொட்டிக்கொண்டு இருந்தார்கள்.கெட்ட வாடை வீசியது நாங்கள் இருவரும் நின்று என்னவென்று விசாரித்தோம். மருத்துவ கழிவுகளை கொட்டக்கூடாது என்று சொன்னோம். இல்லை நாங்கள் எப்போதும் அங்கே கொண்டி வருகிறோம் என்று சொன்னார்கள். பிறகு டிரைவர் நவாப் போன் செய்து அவரது ஓரை வச்சொன்னார். அவரது

ஓனர் உடுமலையைச் சேர்ந்த சாகுல் அமீது. நான் அவர்கள் அங்கே பிடித்து வைத்து ஊர் தலைவர் முருகனுக்கு தகவல் சொன்னோம். அவர் வந்து மடத்துக்குளம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக மறு நாள் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.12.06 09:32:18 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்